*Registered as a Newspaper in Sri Lanka No. A 15*

# ஐக்கிய தீபம்

தேசிய கூட்டுறவுச் சபையின் (யாழ் மாவட்டக் குழு) வெளியீடு

மலர்: 31

இதழ்: 4

மார்கழி

1975

## இந்த இதழில்....


- ஆசிரியர் தலையங்கம்
- சீனக் கிராமங்களில் விவசாயமும் கடன் வசதியும்
- நிலச்சீர்திருத்தக் குறிக்கோள்களும் பொருளாதார அபிவிருத்தியும்
- இலங்கைக் கூட்டுறவு இயக்கம்: தோற்றுவாயும் வளர்ச்சியும்
- வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கு ஏற்ற தொழில் நுட்பம்
- இந்திய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
- பெரிய ஆரம்ப ப. நோ. கூ. ச. மாதிரி நடைமுறைப் பிரமாணங்கள்


EARALAI WEST CO-OPERATIVE SOCIETY

# ஐக்கியதீபம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

மலர் 31 || யாழ்ப்பாணம், மார்கழி 1975 || இதழ் 4

## பலநோக்கங்கள் பெயர்ப்பலகையில் மட்டும் பொறிந்திருக்கப்படலாகா

சில ஆண்டுகளுக்கு முன்னர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை மறுசீரமைத்த பொழுது, கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு மாற்றப்பட்டதோடு சங்கங்களின் நோக்கங்களும் விரிவுபடுத்தப்பட்டன.

புதிய சங்கங்களின் பரந்துபட்ட நோக்கங்களை, உபவிதி 3 விளம்புகின்றது.

அவ்வுபவிதி வருமாறு:

"கூட்டுறவுக் கொள்கைகளுக்கமைய உறுப்பினர்களின் பொருளாதார, சமூக, கலாசார நலன்களுக்கு ஊக்கமளித்தலும், உறுப்பினர்களிடையே சிக்கனம், ஒருவருக்கொருவர் உதவி தன்னுதவி ஆகியவற்றை உற்சாகப்படுத்துவதுமே சங்கத்தின் நோக்கங்களாய் இருத்தல் வேண்டும்.

வாழ்க்கையின், சமுதாயத்தின் ஏறக்குறைய எல்லா அம்சங்களையும் இவ்வுபவிதி தன்னுள் அடக்குகின்றது. ஆங்கிலக் கூற்று ஒன்றினை சற்று மாற்றி கூறுவதென்றால் மனிதனுக்கு பிறப்புத் தொடக்கம் இறப்புவரை மறுசீரமைக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சேவையாற்ற வல்லது.

"பொருள் இல்லார்க்கு இவ்வுலகு இல்லை, அருள் இல்லார்க்கு அவ்வுலகு இல்லை" என வள்ளுவப் பெருந்தகை கூறிப்போந்தார்.

ஆழ்ந்த இவ்வுண்மையை இன்றைய பாணியில் கூறுவதென்றால், பொருளாதாரமே அடித்தளமென்றும், கலை, பண்பாடு போன்றவை மேற் கட்டுமானம் என்றும் குறிப்பிடலாம். அடித்தளம் இல்லாமல் மேற்கட்டுமானத்தை அமைக்கமுடியாது. மேற்கட்டுமானம் இல்லாது மொட்டையாகக் காட்சியளிக்கும் அடித்தளம் கண்றாவியாயிருக்கும்.

இவ்வுண்மைகளை நன்கு உணர்ந்துதான் போலும் உபவிதி 3 இல் முதலாவதாகப் பொருளாதார நோக்கமே கூறப்பட்டுள்ளது. இந்த அடித்தளத்திலேதான் சமூக,

கலாசார நோக்கங்களும் ஏனைய நோக்கங்களும் எய்தப்படவுள்ளன.

பொருளாதாரம் என்னும் பொழுது வெறும் நுகர்வுத் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்வதன்று. உற்பத்திப் பெருக்கமே இன்று பெரிதும் வேண்டப்படுவது. இதற்காகத்தான் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கூடுதலாக விவசாய உற்பத்தியிலும் கைத்தொழில் உற்பத்தியிலும் ஈடுபட வேண்டும் என வற்புறுத்தப்பட்டது.

உணவு நெருக்கடி உருவாகியதும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உப உணவு உற்பத்தியில் தீவிரமாக ஈடுபட உறுப்பினர்களுக்கு வேண்டிய உதவிகளை அளிக்க முன்வந்தன. இதே போன்று உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி சிறு கைத்தொழில்களை வளர்த்து வேலை வாய்ப்புக்களைப் பெருக்கும் பொருட்டு, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட அபிவிருத்திச் சபைகளுடன் இணைந்து செயலாற்றி வருகின்றன.

விவசாய, கைத்தொழில் உற்பத்தியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் ஈடுபட வேண்டுமென்பதே கூட்டுறவாளர்களின் எண்ணம். அதற்கேற்ப திட்டங்கள் மிகக் கவனமாகத் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். இதில் உள்ளூர் வல்லுனர்களின் ஆலோசனைகள் உதவும்.

சமூகத் துறையிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பயனுள்ள சேவைகளை ஆற்றி வருகின்றன. மேலும் ஆற்றலாம். சில சங்கங்கள் சிறுவர் பாடசாலைகளை நடாத்தி வருகின்றன. இது பயன்மிக்க சேவை. இதே போன்று வயது வந்தோருக்கும் கல்வி புகட்டுவதற்குச் சங்கங்கள் முனையலாம். இங்கிலாந்திலே தொழிலாளர் கல்வி இயக்கம் இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டு பெரும் வெற்றியை ஈட்டியதை இங்கு நினைவு கூர்வது பொருத்தமானது. இன்றைய உலகில் இத்தகைய கல்வி நடவடிக்கைகள் இன்றியமையாதவை: பரீட்சைகளில் சித்தி எய்துவதற்கல்ல, வேகமாக மாறிக்கொண்டு வரும் இன்றைய உலகின் அறைகூவலை வெற்றிகரமாகச் சமாளிப்பதற்கு.

வேறு பல சமூகப் பணிகளையும் சங்கங்கள் மேற்கொள்ளலாம். வலது குறைந்தோர்க்கு உதவுவதற்கான திட்டங்கள், சமூக நிறுவனங்களுக்கு உதவுதல், பாடசாலைகள், நூலகங்கள், வேறு நிறுவனங்களுக்கு உதவியளித்தல், உடல்நலத் திட்டங்களுக்கு ஆதரவு அளித்தல் — இவ்வாறு பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம். சுருங்கக் கூறின், சமூகத்தின் பல துறைகளிலும் சங்கங்கள் ஆக்கபூர்வமான பணிகளை ஆற்றலாம், ஓரளவு ஆற்றியும் வருகின்றன.

பொழுது போக்குத் துறையிலும் சங்கங்கள் பயன்மிக்க வழிகளில் பணியாற்றலாம். இத்துறையிலே தனியார் துறை வழிகாட்டியிருக்கின்றது. விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல் அல்லது நடாத்துவதற்கு நிதி உதவி வழங்குதல், சிறந்த



விளையாட்டு வீரர்களுக்கு வேலை வாய்ப்புக்களை அளித்தல், பொழுது போக்குச் சாதனங்களை அன்பளித்தல் — இவ்வழிகளிலே தனியார்துறை பொழுது போக்குத் துறையிலே பணியாற்றி வருகின்றது. இந்த நல்ல முன்மாதிரியைப் பின்பற்றி யாழ் மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று 'கிரிக்கட்' போட்டியை நடாத்தவும் தகுதிவாய்ந்த விளையாட்டு வீரர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கும் முன்வந்திருப்பது வரவேற்க வேண்டியதே.

கலாசாரத்துறையை நன்கு பயன்படுத்தின், கூட்டுறவுக் கோட்பாடுகளைப் பரப்புவதற்கு இது ஏதுவாக இருப்பதோடு, எமது பண்பாட்டு முயற்சிகளும் பலம்பெறுவது திண்ணம்.

எமது நாட்டிலே எத்தனையோ கலைஞர்கள் திறமைமிக்கவர்களாய் இருந்தும், அத்திறமைகளை வெளிக்காட்டுவதற்கு வாய்ப்பின்றி வாடுகின்றனர். இத்தகையோர்களுக்கு வேண்டிய வாய்ப்புக்களையும் உதவிகளையும் அளிப்பதற்கு சங்கங்கள் கிளைக் குழுக்களின் உதவியை நாடலாம். நாடகப் போட்டிகள், கலை விழாக்களை நடாத்தி அல்லது அவை நடாத்தப்படுவதற்கு உதவி, சங்கங்கள் கலாசார வளர்ச்சிக்கு உரம் ஊட்டலாம். ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களை சங்கங்கள் கொள்வனவு செய்து தமது தொழிற் பரப்பிலேயுள்ள பாடசாலைகளுக்கும், பொது நூலகங்களுக்கும் விநியோகிப்பதன் மூலம் ஈழத்து இலக்கியத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கலாம். நல்ல வருவாயைப் பெறும் சங்கங்கள் ஈழத்துச் சஞ்சிகைகளுக்கு விளம்பரங்களைக் கொடுத்துதவலாம் அல்லது சந்தா செலுத்தி அவற்றைப் பொது நூலகங்களுக்குப் பெற்றுக் கொடுக்கலாம்.

கலாசாரத் துறையிலே சங்கங்கள் ஆற்றக் கூடிய பணிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, அண்மையில் யாழ்ப்பாணப் பகுதியிலே ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒரு சினிமாவை நடாத்த முன்வந்துள்ளதைக் குறிப்பிடாமல் இருக்க இயலாது. இவ்விடயத்தில் அது வடபகுதியில் ஒரு முன்னோடி எனலாம்.

நாம் மேலே குறிப்பிட்ட வழிகளிலே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கின், சமுதாயத்தின் பொருளாதார, சமூக, கலாசார வாழ்வுடன் அவை பின்னிப்பிணைவதுடன், தமது குறிக்கோள்களையும் பூரணமாக எய்தலாம். பொருளாதார நோக்கை எய்துவது இன்றியமையாதது. ஆனால் அதற்காக மற்ற நோக்கங்களைப் புறக்கணிக்க வேண்டியதில்லை. மனிதனுக்கு வயிறு மட்டுமல்ல, ஆன்மாவுமுண்டு.

# கூட்டுறவுக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நெறி (சாதாரண பிரிவு) 1976**

*01-01-1976*ல் தொடங்கவிருக்கும் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நெறிக்கு (சாதாரண பிரிவு) கீழே குறிக்கப்பட்டுள்ள தகைமைகளையுடைய கூட்டுறவுப் பணியாளர்களிடமிருந்தும் பணியாளர் அல்லாதோர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்**

### கூட்டுறவுப் பணியாளர்

(1) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் (கனிஷ்ட பிரிவு) பரீட்சையில் சித்தி எய்தியோர்.

(2) சிரேஷ்ட கல்வித்தராதரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத்தராதரப் (சாதாரண) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்த நிரந்தர பணியாளர்.

(3) ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் 5 வருட அனுபவமும் கனிஷ்ட கல்வித்தராதரப் பரீட்சையில் சித்தியெய்திய நிரந்தர பணியாளர்.

### பணியாளர் அல்லாதோர்

சிரேஷ்ட கல்வித்தராதரப் பரீட்சையில் அல்லது கல்விப் பொதுத்தராதர (சாதாரண) பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியெய்தி அத்தடவையில் அல்லது அத்தடவையிலும் வேறு ஒரு தடவையிலும் எண்கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது கணக்குப் பதிவியல் அல்லது தூய கணிதம் அல்லது பிரயோக கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தி அடைந்தவர்கள்.

தகைமையுடைய கூட்டுறவுப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு வெற்றிடங்கள் இருந்தால் மட்டுமே பணியாளர்கள் அல்லாதோர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

விண்ணப்பப்படிவங்களை பொறுப்பதிகாரி, கூட்டுறவுக் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்களைக் கடிதம் மூலம் பெற விரும்புவோர் சொந்த முகவரி எழுதி முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை அனுப்பி வைத்தல் வேண்டும்.

கூட்டுறவுப் பணியாளர்களின் விண்ணப்பங்கள் அப்பகுதி கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர்மூலம் சமர்ப்பிக்கப்படல் **வேண்டும்.**

**விண்ணப்பங்களின் முடிவு திகதி: 20-12-75**

**சு. சிவசுப்பிரமணியம்**
பொறுப்பதிகாரிக்காக
கூட்டுறவுக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

*5-12-1975*

(முற்றொடர்)

# சீனக்கிராமங்களில் விவசாயமும் கடன் வசதியும்

**சின்கிச்சி கட்டயநாகி**
(தலைவர் விவசாய, வனவியல் மத்திய கூட்டுறவு வங்கி, யப்பான்)

மூன்றாவதாக விவசாய வரி ஒன்று விதிக்கப்படுகின்றது. விளைச்சல் அதிகரித்தாலும் இவ்வரி கூட்டப்படுவதில்லை — இவ்வம்சத்தில் யப்பானிய விவசாய வரியிலிருந்து இது வேறுபடுகின்றது, ஆதலால், உற்பத்தி குன்றியிருக்கும்போது, இவ்வரி ஒரு சுமையாக இருக்கின்றபோதிலும் உற்பத்தி பெருகப் பெருக, இவ்வரிப்பளு குறைகின்றது. 'குறைந்தவரி'க் கமயூனில், இவ்வரி உற்பத்தியில் ஏறக்குறைய 2 வீதமாகும். இப்பொழுது அவ்வரி 3 அல்லது 4 வீதத்திற்கு மேற்படுவதில்லை.

எனவே, உற்பத்திக் குழுமங்கள் தமது அறுவடையில் அல்லது வருவாயிலிருந்து 10வீதத்தைத் திரட்டு நிதிக்கும், ஏறக்குறைய 2 அல்லது3வீதத்தைப் பொது நல நிதிக்கும், 2 அல்லது 3 வீதத்தை விவசாய வரியாகவும் செலுத்துகின்றன. இப் பங்களிப்புக்கள் அல்லது ஒதுக்கீடுகள் ஒவ்வொரு உற்பத்திக் குழுமத்தின் வருவாயில் ஒரு சிறு பகுதியாகவே இருப்பதனால், விளைவாக்கத்தைக் கூட்டி உற்பத்தியைப் பெருக்குவதற்குப் போதிய ஊக்குவிப்பு உண்டு.

வெவ்வேறு செலவுகளையும். கம்யூனின் நிதிக்குச் செலுத்தப்படும் மூன்று பங்களிப்புக்களையும் கழித்த பின்பு, உற்பத்திக் குழுமங்களின் மிகுதி வருமானம் உறுப்பினர்களுக்கிடையே அவர்கள் செய்த வேலைக்கு ஏற்ப விகிதாசாரப்படி பகிரப்படுகின்றது எல்லாச் செலவுகளும் கொடுக்கப்பட்ட பின்னர், அவர்களுக்கு அறுவடையின் பெறுமதியில் 40 அல்லது 50 வீதம் கிடைக்கப்பெறுகின்

றது. தாம் விளைவிக்கும் பயிர்களின் பெறுமதியில் ஏறக்குறைய அரைவாசிக்குச் சமமான வருமானத்தைப் பெறுவதனால், மக்கள் கம்யூன் உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து கொண்டே வருகின்றது.

**கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் பணி**

சீனப் பொருளாதார அமைப்பில், மக்கள் கம்யூன்களுக்கு கூட்டுறவு கடனுதவு சங்கங்களும், வழங்கீடு, சந்தைப்படுத்துதல் கூட்டுறவுச் சங்கங்களும் சேவையாற்றுகின்றன. முன்னையவை சேமிப்பு, நிதி வழங்குதல் ஆகியவற்றுடன் தொடர்புள்ளவை. பின்னையவை, யப்பானிய பாவனையாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் போன்று வீட்டுத் தேவைகளை விநியோகிக்கின்றன. நிதி விடயங்களில் தொழில் ரீதியாக அக்கறையுடையவன் என்ற முறையில் நான் சீன மக்கள் வங்கியின் உபதலைவரிடம் (அவர் மத்திய வங்கியின் தலைவரும் கூட) சில கேள்விகளைக்கேட்டேன்.

அவர் கூறியதன் படி, மக்கள் வங்கிக்கு இரு பணிகள் உள: ஒன்று, மத்திய வங்கியின் பணி; அதாவது, யப்பானிய வங்கி போன்று நாணயத்தை வெளியிடுதல். இரண்டாவது வர்த்தக வங்கியின் பணி; அதாவது, வைப்புக்களுடனும், கடன்களுடனும் தொடர்புள்ளது. சீன மத்திய வங்கியே அன்னிய செலாவணியுடன் தொடர்பு கொள்கின்றது, விவசாய முயற்சிகளுக்கு மக்கள் வங்கி நிதியுதவி வழங்குகின்றது. எனினும் கிராமப் புறங்களில் கூட்டுறவு கடனுதவு சங்கங்களே பிரதான நிதி வழங்கும் நிறுவனங்களாக விளங்குகின்றன: இச்சங்கங்களை மக்கள் கம்யூன் உறுப்பினர்களே அமைக்கின்றனர்.

பொதுநல, திரட்டு நிதிகளிலும் வேறு நிதிகளிலும் கம்யூனிற்கு கணிசமான பணத்தொகை உண்டு. இம் மேலதிக ஒதுக்கீட்டுப் பணங்கள், கம்யூனின் கணக்கில், கூட்டுறவு கடனுதவு சங்கங்களில் இடப்படுகின்றன. தனிப்பட்ட காணியிலிருந்து பெறப்படும் வருமானத்தைத் தவிர்த்து கூட்டுப் பண்ணை முகாமையில் பங்குபற்றும் கம்யூன் உறுப்பினர்களின் வருடாந்த வருமானம் தலா 382 யுவான் 28 பவுண் எனக் கண்டனிற்கு அண்மையில் நான் கேள்வியுற்றேன். ஒரு மாதத்திற்கு தனிப்பட்ட சொந்தச் செலவு வழக்கமாக ஏறக்குறைய 8 அல்லது 10 யுவான்: அதாவது ஓர் ஆண்டிற்கு, ஏறக்குறைய 120 யுவான். வருடாந்த வருமானம் 382 யுவானாகவிருப்பதால், கணிசமான தொகையை மிச்சம் பிடித்து கூட்டுறவு கடனுதவுச் சங்கத்தில் இடமுடிகின்றது.

**சேமிப்புப் (சிக்கனம், கடன் வசதி) பற்றிய மனப்பாங்கு**

சீன பொதுவுடைமை நாடாகவிருப்பதனால், மூலதனத்தில் மீள்வரவு பெறுவது பற்றி அல்லது சேமிப்பில் வட்டி வழங்குவது பற்றி கொள்கை அடிப்படையில் ஐயுறவுகள் எழுப்பப்படுகின்றன; எனினும் சீனத் துணைப் பிரதமர், திரு. லிசியன் நியன், புனருத்தாரண வேலைகளுக்கும், புரட்சியை நிறைவேற்றுவதற்கும் பணம் கூடுதலாகத் தேவைப்படுகின்றதென்றும், மக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததென்றும் கூறினார். 'தளரா முயற்சி, சிக்கனம் மூலம் நாட்டைக் கட்டியெழுப்புதல் மக்களின் உயிரைக் காப்பாற்றுகின்றது' என்ற எண்ணம் நாடு முழுவதிலும் பரவியுள்ளது.

கூட்டுறவு கடனுதவு சங்கங்களில் நடப்புகணக்குகளுக்கு 2·16 வீத வட்டியும் நிலையான வைப்புக்களுக்கு 3·24 வீத வட்டியும் வழங்கப்படுகின்றன. உற்பத்தி நோக்கங்களுக்காகப் பெறப்படும் குறுகிய காலக் கடன்களுக்கு 4·[illegible]2 வீத வட்டியும், சாதனங்களுக்கான நீண்டகாலக் கடனுக்கு 2·16 வீத வட்டியும் கடன் பெறுபவர்களிடமிருந்துஅறவிடப்படுகின்றன. தமது மேலதிகப் பணங்களை மக்கள் கம்யூன்கள் மக்கள் வங்கியில் இடுகின்றன: இவ்வைப்புக்களுக்கு 3·24 வீத வட்டி கொடுக்கப்படுகின்றது. கம்யூன்கள் மக்கள் வங்கியிடமிருந்து கடன் பெறும்போது அவை 2·16 வீத வட்டியே கொடுக்கின்றன. நடப்பு கணக்குகளுக்கு இதே வட்டி வீதம் வழங்கப்படுகின்றது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வைப்புப் பணங்களுக்கு வழங்கப்படும் வட்டி வீதம் கம்யூன்களிடமிருந்து கடன்களுக்கு அறவிடப்படும் வட்டி வீதத்தினை விடக் கூடுதலானது. மக்கள் கம்யூன்களின் மேலதிக வருமானங்கள் மக்கள் வங்

கியில் இடப்படுகின்றன. பொதுநல நிதியிலிருந்து சமூக பொதுநலச் செலவுகள் வழங்கப்படுகின்றன. புரட்சி 1 49-ல் ஏற்பட்டதிலிருந்து சீனாவில் குறிப்பிடத்தக்க விலை ஏற்ற இறக்கங்கள் நிகழவில்லையென்பதுகவனிக்கத்தக்கது. அங்கு பணவீக்கம் இல்லை எனக் கூறப்படுகின்றது.

இனி விலைக் கொள்கையைப் பற்றிப் பார்ப்போம். புரட்சிக்கு முன்னர் விளைபொருள்களுக்குக் குறைந்த விலைகளே கிடைக்கப் பெற்றன. கைத்தொழிற் பொருள்களுக்கு உயர்ந்த விலைகள் வழங்கப்பட்டன. இச்சம நிலையின்மையைத் திருத்தும் பொருட்டு, விளைபொருள்களின் விலைகளை உயர்த்துவதற்கு அதிகாரிகள் முயல்கின்றனர். கைத்தொழில் உற்பத்தியைவிட உணவு உற்பத்திக்கே முதன்மை வழங்கப்படுகின்றது. மாட்சிமை மிக்க யப்பானிய அரசவையிலுள்ள மதிப்பற்ற புனித முச்செல்வங்களுக்கு ஒப்பாக சயிக்கிலும், தையல் இயந்திரமும், வானொலிப் பெட்டியும் விளங்குகின்றன; அதாயுது, உணவோடு ஒப்பிடும்வபாது, அவை ஆடம்பரப் பொருள்கள். சங்காய் போன்ற ஒரு பெரிய நகரத்தில் ஒரு தொழிலாளியின் மாதாந்தக் கூலி ஏறக்குறைய 13 பவுண் நீண்ட காலமாகப் பொருள்களின் விலைகள் நிலைப்படுத்தப்பட்டிருக்கின்றன. கைத்தொழில் ஆக்க வளம் பெருகப் பெருகக் கைத்தொழிற் பொருள்களின் விலைகள் வீழ்ச்சி அடையத் தலைப்படுகின்றன. பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதில் சீனா ஈட்டியுள்ள வெற்றியிலேயே அதன் பலம் தங்கியுள்ளதென நான் நினைக்கின்றேன்.

**சீன விஜயம் பற்றிய சிந்தனைகள்**

சீனாவிற்கும் யப்பானிற்குமிடையே நட்பு உறவுகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டதிலிருந்து, சீனாவின் உணவு உற்பத்திப் பெருக்கம் பற்றியும், விலை குறைந்த சீன உணவு யப்பானிற்கு ஏற்றுமதியாகக்கூடிய சாத்தியப்பாடு பற்றியும் யப்பானிய விவசாயிகள் கவலையுற்றிருக்கின்றனர். இது குறித்து சீனத் துணைப்பிரதமர் பின்வருமாறு உறுதியளித்தார்; ''இப்பொழுது சீனாவில் உணவு உற்பத்தியைப் பெருக்க நாம் முயல்கிறோம், அப்பொழுது தான்



மக்கள் கூடுதலாகவும் செம்மையாகவும் சாப்பிடுவதுடன் தேசப் பாதுகாப்பின் பொருட்டு உணவு கையிருப்புக்களைப் பெருக்கலாம், விளைபொருள்களை நாம் யப்பானிற்கு ஏற்றுமதி செய்வதில்லை, ஆதலால் எம்மீது யப்பானிய விவசாயிகள் பகைமை கொள்வதற்கு எதுவித காரணமும் இல்லை. இப்பொழுது குடும்பங்களாலும், மக்கள் கம்யூன்களாலும் சீன அரசாங்கத்தாலும் கையிருப்பாகச் சேகரிக்கப்பட்டுள்ள உணவின் தொகை 40 கோடி தொன்களாகும்; இதனை 80 கோடி தொன்னாக உயர்த்துவதற்கு உத்தேசம். சீனாவில் உணவுக் கையிருப்புக்கள் அதிகரித்து வருகின்றன. ஆனாலும் இப்பொழுது யப்பானிற்குக் குறிப்பிடத்தக்க அளவு சீன உணவு ஏற்றுமதி செய்யப்படும் சாத்தியக்கூறு இல்லை. அண்மைய எதிர்காலத்தில் இவ்வாறு நடைபெறலாம் ''என வீணாக யப்பானிய விவசாயிகள் கவலையுற வேண்டியதில்லை,''

யப்பானிய விவசாயம் இயந்திர மயமாக்கப்பட்டதன் விளைவாக செயற்திறன் அதிகரித்துள்ளதோடு தலா உற்பத்தியும் குறிப்பிடத்தக்க அளவு பெருகியுள்ளதென்றும் ஆதலால் யப்பானிய விவசாயிகளிடமிருந்து தொழில் நுட்ப உதவி பெறுவதில் சீனர் அக்கறை கொண்டுள்ளனர் என அவர் மேலும் கூறினார். கன்டனிற்கு அண்மையிலுள்ள சிறு பண்ணைகளுக்கு யப்பானிய விவசாய இயந்திரங்கள் உகந்தவை என நான் நினைக்கின்றேன். ஆனால் வடகிழக்குச் சீனாவில் உள்ள பெரிய பண்ணைகளுக்கு அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் பெரிய விவசாய இயந்திரங்களே பொருத்தமாயிருக்கலாம்,

எமது சீன விஜயம் கவர்ச்சிமிக்கதாய் விளங்கியது. சீன யப்பானிய சமூக அமைப்புக்கள் வேறுபட்டிருந்த போதிலும், சீன அனுபவத்திலிருந்து தக்க படிப்பினைகளைக் கற்று பொருத்தமானவற்றை யப்பானிய விவசாயத்தில் நாம் கைக்கொள்ளவேண்டும்,

(முற்றும்)

# நிலச்சீர்திருத்தக் குறிக்கோள்களும் பொருளாதார அபிவிருத்தியும்

டேவிஸ் மக்கன்ரயர்
(பேராசிரியர், கலிபோர்னியா பல்கலைக்கழகம்)

பொருளாதார அபிவிருத்தியில் நிலச்சீர்திருத்தம் ஏற்படுத்தியுள்ள விளைவுகள் குறித்து பல்வேறு ஆராய்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன. நிலச்சீர்திருத்தத்தில் பொருளாதார அபிவிருத்தியின் தாக்கத்தை இக்கட்டுரை ஆராயும். நிலச்சீர்திருத்தம் பற்றிய தற்பொழுதைய ஆராய்ச்சிகள் பெரும்பாலும் பின்தங்கிய நாடுகளிலே அதன் பங்கினைப்பற்றியன. குறிப்பிடத்தக்க அளவு பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டதும், அதனால் நிலச்சீர்திருத்தத்தில் ஏற்படும் தாக்கத்தைப் பற்றியே நாம் இங்கு கவனிப்போம். இப்பிரச்சினையை நன்கு புரியும்பொருட்டு வெவ்வேறு பொருளாதார அபிவிருத்தி மட்டங்களிலுள்ள நாடுகளின் அனுபவத்தினை நாம் இங்குஆராய்வோம். இந்நாடுகளில் சில பின்தங்கிய நிலையிலிருந்து ஓரளவு வளர்ச்சியுற்ற நிலையினை எய்தியுள்ளன.

வரலாற்று ரீதியாக நோக்குங்கால் உழவனுக்கே நிலவுடைமை வழங்கப்பட வேண்டும் என்பதே நிலச்சீர்திருத்தங்களின் இலக்காய் இருந்தது. இதன்மூலம் விவசாயத்தில் ஈடுபடும் வர்க்கங்களுக்கிடையே பொருளாதார சமூக சமத்துவமின்மையைக் குறைத்து உழவனை துயர்மிக்க நிலையிலிருந்து மீட்கலாமென நிலச்சீர்திருத்தவாதிகள் கருதினர். மரபுவழி நிலவுடைமைச் சமுதாயங்களில் உழவருக்குக் காணியை வழங்குவதனால் அவர்களுக்கு ஓரளவு சுதந்திரமும், பாதுகாப்பும் சமுதாயத்தில் மரியாதையும் அளிப்பதோடு நிலக்கிழார்களின் கோரப்பிடியிலிருந்து அவர்களை விடுவிப்பதாகும். எனவே நிலச்சீர்திருத்தம் உண்மையில் சமூக, பொருளாதார சீர்திருத்தமாக விளங்குவதோடு தவிர்க்க முடியாதவாறு அரசியல் அதிகாரத்தைக்கைப்பற்றும் போராட்டங்களுடன் பின்னிப்பிணைந்தது. நிலத்தை மறுபங்கீடு செய்வது வழக்கமாக அதிகார உறவுகளை மாற்றியமைப்பதற்கு வழிகோலும் இடை நிகழ்வாக இருந்தது. அதிகார அமைப்பில் ஏற்படும் மாற்றத்தின் அளவிற்கு ஏற்பவே ஒரு குறிப்பிட்ட நிலச்சீர்திருத்தம் தீவிரமற்றதாய் இருக்கும் அல்லது தீவிரம் வாய்ந்ததாய் இருக்கும்.



உழவருக்கே காணி என்ற வரலாறு கண்ட குறிக்கோளுடன், 20ம் நூற்றாண்டிலே நிலச்சீர்திருத்தத்திற்கு வேறு நோக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இப்புதிய குறிக்கோள்களில் பின்வருவன முக்கியமானவை: (1) குடும்பப்பண்ணை என்ற நிறுவனத்தைப் பேணிப் பலப்படுத்துதல் (2) விவசாயத்தில் சமூக உடைமையை நிலைநாட்டுதல் (3) நிலத்தைச் சார்ந்த வேலைவாய்ப்புக்களைப் பெருக்குதல் (4) விவசாய உற்பத்தியைப் பெருக்குதல் (5) விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் மக்களின் வருவாயைப் பெருக்குதல்

1951ல், பல்வேறு குறிக்கோள்களைக் கொண்ட உலகளாவிய சமூகக் கொள்கையின் அந்தஸ்திற்கு நிலச்சீர்திருத்தத்தினை உலகநாடுகள் சபை உயர்த்தியது. பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதே உலக நாடுகள் சபை புகுத்திய முக்கியமான புதுக் குறிக்கோளாகும். உலக நாடுகள் சபை நிலச்சீர்திருத்தம் குறித்து தொடக்கத்தில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கு அடித்தளமாக இருந்த தொழில் நுட்ப அறிக்கையின் தலைப்பிலிருந்தே உலக நாடுகள் சபையின் மனப்பான்மை தெட்டத்தெளிவாகின்றது. அத்தலைப்பு வருமாறு: ''பொருளாதார அபிவிருத்திக்கு முட்டுக்கட்டைகளாகஉள்ள நிலவுடைமை அமைப்பின் குறைபாடுகள்''

சமூக நீதி என்ற நோக்குக் கோணத்திலிருந்து முன்னர் நோக்கப்பட்டிருக்கக் கூடிய நிலவுடைமை அமைப்புக்களின் தன்மைகள், இப்பொழுது எல்லோராலும் விரும்பப்படும் பொருளாதார அபிவிருத்திக்குத் தடைகளாகவுள்ள 'குறைபாடு'களாகக் கருதப்படுகின்றன. வளர்ச்சிக்குத் தடையாயிருந்த இம்முட்டுக்கட்டைகளை அகற்றுவதற்கு நிலச்சீர்திருத்தம் தேவைப்பட்டது. இக்குறிக்

கோளுடன் குடும்பப்பண்ணை அமைப்பினைப் பலப் படுத்துவதற்குச் சீர்திருத் தங்கள் செய்யப்படவேண்டு மென மேற்கத்திய நாடுகள் விரும்பின. விவசாயத்தில் சமூகவுடமையை நிலை நாட் டுவதற்குக் காணிக் கொள் கைகள் ஏதுவாய் இருக்க வேண்டுமென சமூகவுடமை நாடுகள் தீர்மானித்தன.

பல்வேறு நோக்கங்களைக் கொண்டிருப்பதனுல் நிலச் சீர்திருத்தத்தைப் பற்றிய நவீன பார்வை, பழைய கோட்பாட்டிலிருந்து கொள் கையளவிலும் சரி, செயற் பாட்டிலும்சரி வேறுபட்டு, கூடுதலாய்ச் சிக்கல் வாய்ந் ததாயும், தொழில் நுட்பம் வாய்ந்ததாயும் காட்சிய ளிக்கின்றது. ஏனைய கொள் கைகளைத் தவிர்த்து தனிக் கொள்கை ஒன்றைமட்டும் எய்துவதற்கு நாடுகள் விழை வதில்லை. மாருக, பல்வேறு குறிக்கோள்கள் முதன்மை அடிப்படையில் இணைக்கப் படுகின்றன. ஒரே நேரத் தில் பல்வேறு குறிக்கோள் களை எய்துவதற்கு நாடுகள் விரும்புகின்றன. இவ்வாறு விரும்பப்படும் குறிக்கோள் களில் ஒவ்வொன்றும் ஏனை யவற்றைக் கட்டுப்படுத்து கின்றது. எனவே, கொள் கையை வகுப்பதென்பது முக்கியத்துவத்திற்கு ஏற்ப குறிக்கோள்களை ஒழுங்கு படுத்துவதன்று. பல்வேறு குறிக்கோள்கள் ஒவ்வொன் றையும் எவ்வளவிற்கு வற் புறுத்துவதெனத் தீர்மா னிப்பதே பிரச்சினையின்மை யாகும். ஒவ்வொரு குறிக் கோளும், அதனை ஆதரிப்ப வர்களின் அதிகார பலத் தைப்பொறுத்து, குறிப் பிட்ட அரசியல் வலுவுள்ள தாக விளங்கும். மிகச் சிறந்ததெனக் கருதப்படும் குறிக்கோள்கள் சமூக, பொ ருளாதார அரசியல் அடித் தளத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றமடையும்.

(வளரும்)

பலத்தினைத் தருவதே சமயம்;
பலமுள்ள வாழ்வே சமயம்.
பலமற்றது வேறு எதுவாகவோ இருக்கலாம்.

—சுவாமி விவேகானந்தர்

திருநெல்வேலி ப. நோ. கூ. ச.

## பேச்சுப் போட்டி

**கனிஷ்ட பிரிவு - ஆண்கள்**
1. க. சிவபாலன்
2. க. சிவகுமார்
3. க. வசந்தராஜன்

**பெண்கள்**
1. வி. சுமதி
2. ந. தனலட்சுமி
3. ஞா. சித்திரகுமாரி

**சிரேஷ்ட பிரிவு - ஆண்கள்**
1. க. மகேஸ்வரன்
2. இ. பொன்ராசா
3. கு. சிவகுமார்

## தனிப்பாடல்

**கனிஷ்ட பிரிவு - ஆண்கள்**
1. க. சிவகுமார்
2. து. ஜெயகாந்தன்
3. ச. ரவீந்திரன்

**பெண்கள்**
1. பொ. தர்மேந்திரா

**சிரேஷ்ட பிரிவு - ஆண்கள்**
1. கி. சிவபாலன் 2. க. இராசவரன்

**பெண்கள்**
1. S. சூரியகலா
2. இ. புவனேஸ்வரி
3. மகாலட்சுமி வல்லிபுரம்

## கூட்டுப் பாடல்

**கனிஷ்ட பிரிவு - பெண்கள்**
1. சைவ கனிஷ்ட மகா வித்தியாலயம்
2. ஞானபண்டித வித்தியாசாலை

**கனிஷ்ட பிரிவு - ஆண்கள்**
கோண்டாவில் சைவ கனிஷ்ட மகா வித்தியாலாயம்

**சிரேஷ்ட பிரிவு - பெண்கள்**
1. ஞானபண்டித வித்தியாசாலை
2. செங்குந்தா இந்துக் கல்லூரி
3. சைவ கனிஷ்ட மகா வித்தியாலயம்

**சிரேஷ்ட பிரிவு - ஆண்கள்**
கோண்டாவில் சைவ கனிஷ்ட மகா வித்தியாலயம்

**பேச்சுப் போட்டி - சிரேஷ்ட பிரிவு -பெண்கள்**
1. சி. திருக்கேதீஸ்வரி
2. வ. கிருஷ்ணகுமாரி
3. செ. சுந்தராம்பாள்

(முற்றொடர்)

# இலங்கைக் கூட்டுறவு இயக்கம்

(கூட்டுறவு முகாமைச் சேவைகள் நிலையத்தின் வெளியீடு)

## விவசாய அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள்

முன்பு கூறியதுபோல, நெற்பயிர்ச் செய்கைக்கெனப் ப.நோ.குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்கு உதவி வழங்குகின்றன. காசாகவும் பொருளாகவும். இச்சங்கங்கள் உறுப்பினர்களுக்குக் கடன் வழங்குகின்றன, உரம், கிருமி, களைநாசினிகள் போன்றவையே வழக்கமாகப் பொருளாக வழங்கப்படுகின்றன. விவசாய அமைச்சு செய்யும் தகவுரைகளின் அடிப்படையிலேயே காசாக அல்லது பொருளாகக் கடன்கள் வழங்கப்படுகின்றன. இச்சங்கங்கள் கமக்காரனிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்து நெற் கொள்வனவுச் சபைக்குக் கொடுக்கின்றன: இச்சபைக்கே நாட்டிற்குள் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு ஏகபோக உரிமை உண்டு.

இச்சேவைகளோடு, அண்மைக் காலத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட அபிவிருத்திச் சபைகளுடன் ஒத்துழைத்து, தமது முயற்சிகளில் ஒரு பகுதியாக, விவசாய உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றன. பல சங்கங்கள் 25-50 ஏக்கர்களில் பயிர்ச்செய்கையை மேற்கொண்டுள்ளன.

கூட்டுறவுப்பண்ணைச் சங்கம் அண்மையில் தோன்றியுள்ள புதுவகைக் கூட்டுறவு விவசாயச் சங்கம், விவசாய அமைச்சின் முனைப்பான உதவியைப்பெற்று வரும் இச்சங்கங்கள், புதுக்காணிகளிலே உணவுப் பயிர்களைப் பெரும்பாலும் பயிரிடுவதில் ஈடுபட்டுள்ளன. இன்று இத்தகைய 50 சங்கங்கள் இயங்கி வருகின்றன. 16,690 ஏக்கர் நிலத்தைப் பயிரிடும் இச்சங்கங்களின் உறுப்பினர் தொகை 3,175.

நிலச்சீர்திருத்த ஆணைக்குழுவிடம் உடைமை வழங்கப்பட்டுள்ள காணிகளில் நிலச்சீர்திருத்தக் கூட்டுறவுக் குடியேற்றச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்களுக்கு நிலச்சீர்திருத்த ஆணைக்குழு உதவியளிக்கின்றது. இத்தகைய 114 சங்கங்கள் இயங்கி வருகின்றன. 10,853 ஏக்கர் நிலத்தில் பயிரிடும் இச்சங்கங்களின் உறுப்பினர்தொகை 2,560. பெரும்பாலான நிலத்தில் தேயிலையும், ரப்பரும், தென்னையும், கறுவாவும் பயிரிடப்பட்டு வருகின்றன. வருவாயை அதிகரிக்கும்பொருட்டு சங்கங்கள் இப்பொழுது பல்வேறு வகைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றன. இதற்கென 75,000 ஏக்கர் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளன. இதைவிட நிலச்சீர்திருத்தத்திற்குப்பின் 48, 143 ஏக்கர் நிலம் பலநோக்குக்



கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கையளிக்கப்பட்டு அவற்றின் நேரடிப் பொறுப்பிலுள்ளன.

மேற்குறிப்பிட்ட இரு வகைச் சங்கங்களிலும் சங்கமே காணியை கூட்டாக உடைமை கொண்டிருக்கின்றது: நிலத்தைப் பயிரிடுவதற்கு மட்டுமே உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு. சில சங்கங்களில், குடிசை அமைப்பதற்கு ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஏறக்குறைய ¼ ஏக்கர் கொடுக்கப்பட்டுள்ளது. வேறு சங்கங்களில், உறுப்பினர்கள் பொது விடுதிகளில் தங்கி, சங்கச் சமையல் அறையைப் பாவிக்கின்றனர். அவ்வப்பகுதி விவசாய உத்தியோகத்தர்களுடன் கலந்தாலோசித்து உறுப்பினர்கள் சங்கத்தின் பொது வேலைத் திட்டத்தைத் தயாரிக்கின்றனர். திட்டத்தைச் செயற்படுத்துவதிலும் இலக்குகளை எய்துவதிலும் எல்லா உறுப்பினர்களும் சுறுசுறுப்பான அக்கறை எடுக்கின்றனர். விவசாய இடுபொருள்களை வழங்குவதிலும், விளைபொருள்களைச் சந்தைப்படுத்துவதிலும் இச்சங்கங்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் வணிகத் தொடர்புகள் கொண்டுள்ளன. இச்சங்கங்கள் பெரும்பாலானவற்றில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் இளைஞர்களே. அவர்கள் ஏறக்குறைய கல்விப்பொதுத் தராதரப் (சாதாரண) பத்திர வகுப்பு வரை கல்வி கற்றுள்ளனர். இதுவரை, பெறுபேறுகள் உற்சாகமளிக்கின்றன. இத்தகைய சங்கங்களின் தொகை அதிகரித்து வருகின்றது.

## கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

1972 ஆரம்பத்தில் ஏறக்குறைய 271 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களிருந்தன. இவை ஒன்றிணைக்கப்பட்டு, 45 பெரிய ஆரம்ப கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன: கிளைகளின் தொகை 234. மொத்த உறுப்பினர் தொகை 12,714. முற்றாகச் செலுத்தப்பட்ட பங்குமுதலின் தொகை ஏறக்குறைய ரூ. 8 இலட்சம்.

இச்சங்கங்களிடம் 1800 பழைய பாணி மீன்பிடி வள்ளங்களும், வெளி இணைப்பு இயந்திரம் உள்ள 786 தும்புக் கண்ணாடிப் படகுகளும், இயந்திரப் படகுகளும் இருக்கின்றன. மிக அண்மையில் 3½ தொன் இயந்திரப் படகுகளும் இச்சங்கங்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன: இப்பொழுது இவ்வகைப் படகுகளில் 132 புழக்கத்தில் உள்ளன. 1973 இல் இச்சங்கங்களின் வருடாந்த விற்பனைச் சுழற்சி ரூ. 15,564.186/-

இச்சங்கங்கள் மீன் விற்பனைக் கூட்டுறவுச் சமாசத்தின் உறுப்பினர்கள். முன்பு இச்சமாசமே சங்கங்கள் பிடித்த மீனை மத்திய இடத்தில் களஞ்சியப்படுத்தி அவற்றினை விற்பனை செய்வதற்குப் பொறுப்பாகவிருந்தது. 1964இல் மீன்பிடிக் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டதும், அது மீன் விற்பனைச் சமாசத்தின் பணிகள் பெரும்பாலானவற்றைக் கையேற்றது. எனவே, இப்பொழுது மீன் விற்பனைச் சமாசம் மீனவரிடையே விரிவாக்கல் வேலைகளை மேற்கொண்டு வருவ

துடன் கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு வழங்கப்படும் வசதிகளை அபிவிருத்தி செய்து வருகின்றது. கிழக்கு மாகாணக் கரையோரத்தில் அது ஒரு ஐஸ் தொழிற்சாலையை நடாத்தி வருகின்றது. இத்தொழிற்சாலை 'நொரிப்' என்ற நார்வே நிறுவனத்தின் நன்கொடை.

## நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

இலங்கையில் ஏறக்குறைய 500 நெசவாளர் சங்கங்கள் இருக்கின்றன. வழக்கமாக சங்கத்தால் அமைக்கப்பட்ட பொது வேலைத் தலத்திலேயே நெசவாளர் வேலை செய்கின்றனர். ஒரு சிலர் தமது சொந்த, கைத்தறிகளில் வீட்டிலேயே வேலை செய்கின்றனர். கைத்தறிகளோடு, மின்தறிகளையும் சில சங்கங்கள் நிறுவியுள்ளன. கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சொந்தமாக ஏறக்குறைய 3,500 கைத்தறிகளும், 1,000 மின்தறிகளும் உண்டு.

மூலப்பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கும் மெருகூட்டப்பட்ட புடைவைகளைச் சந்தைப்படுத்துவதற்கும், 21 நெசவுச் சமாசங்கள் இயங்கி வருகின்றன. இச்சமாசங்களில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்புரிமை வகிக்கின்றன.

1973 இல் கூட்டுறவுத்துறை ரூ. 4·8 கோடி பெறுமதியான புடைவைகளை உற்பத்தி செய்தது. அவ்வாண்டிலே இலங்கையில் நெய்யப்பட்ட, மெருகூட்டப்பட்ட துணிகளின் மொத்தப் பெறுமதியில் இது 25 வீதம்.

## கூட்டுறவு மருத்துவமனைச் சங்கங்கள்

இலங்கையில் 11 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இவை யாவற்றிலும் வெளி நோயாளர்க்கும், உள் நோயாளர்க்கும் சிகிச்சையளிக்கப்படுகின்றது. 1972 இல் 181,000 வெளி நோயாளரும், 36,000 உள் நோயாளரும் இம்மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்றனர்.

## வெளி நாட்டுச் செடிகள், ஓர்க்கிட்மலர் வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள்

இத்துறையிலே, மேற்குறிப்பிட்ட சங்கம் ஒரு முன்னோடி எனலாம். நாட்டிற்குப் புதிய வருவாய் மூலத்தைப் பெற்றுத் தருவதற்குத் தலைப்பட்டதனாலும் ஏற்றுமதியைப் பெருக்கும் குறிக்கோளினை அது கொண்டிருப்பதனாலும், தேசீய நோக்குக் கோணத்தில் இச்சங்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறிப்பிடத்தக்கது. இப்பொழுது இச்சங்கத்தில் ஏறக்குறைய 707 உறுப்பினர்கள் இருக்கின்றனர். வெளிநாட்டுச்செடி, மலர்ச்செடி வகைகளை வளர்ப்பதற்கு உறுப்பினர்களைத் தூண்டுவதும் கத்தரிக்கப்பட்ட மலர்களை வணிக அடிப்படையில் ஏற்றுமதி செய்வதும் இச்சங்கத்தின் குறிக்கோள்கள்.

இலங்கையிலிருந்து மொத்தமாக ஏற்றுமதி செய்யப்படும் கத்தரிக்கப்பட்ட மலர்களில், 90 வீத ஓர்க்கிட் மலர்கள் இச்சங்க உறுப்பினர்களால் வளர்க்கப்பட்டவை. பெரும்பாலும் ஐரோப்பாவிற்கே இவை ஏற்றுமதியாகின்றன.



## வேறு கூட்டுறவு நிறுவனங்கள்

உள்ளூர், பிரதேச நிறுவனங்களுக்கிடையே மேல் நாடுகளிலே உள்ள திட்டவட்டமான வரையறையும் அடுக்கு அமைப்பும், இலங்கையில் இல்லை. இங்கு கூட்டுறவு இயக்கம் எவ்வாறு வளர்ந்ததென்பதையும், இயக்கத்தின் வளர்ச்சிக் கட்டத்தையும் இது உணர்த்துகின்றது.

இதுகாறும் குறிப்பிடப்பட்ட சங்கங்கள் எல்லாவகை ஆரம்ப மட்டச்சங்கங்களையும் உள்ளடக்கவில்லை. முக்கிய வகைச் சங்கங்களே குறிப்பிடப்பட்டன. இயங்கிவரும் வேறு வகைச் சங்கங்கள் வருமாறு: சிக்கனச் சங்கங்கள், புகையிலை உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள், தேயிலை உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள், பாற்பண்ணைச் சங்கங்கள், வகுப்புத் தொழிலாளர் சங்கங்கள்.

## மாவட்ட அபிவிருத்திச் சபைத் திட்டங்கள்

திட்டமிடல் அமைச்சின் ஆதரவில் எல்லா உள்ளூராட்சிப் பகுதிகளிலும் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் நிறுவப்பட்டுள்ளன. உள்ளூரில் கிடைக்கப் பெறும் இயற்கை, மனிதவள ஆதாரங்களைப் பயன்படுத்தி ஏதேனும் திட்டங்களை வகுத்து செயற்படுத்துவதே மேற்படி திட்டத்தின் குறிக்கோளாகும். பயனுள்ள வேலை வாய்ப்புக்களை வழங்குவதும் அடிமட்டத்திலுள்ள மக்களை - திட்டமிடலில் ஈடுபடுத்துவதுமே இதன் இரட்டைப் பயன்பாடாகும்.

மாவட்ட அபிவிருத்திச் சபைகளினால் திட்டமிடப்படும் செய்திட்டங்கள் கூட்டுறவு நிறுவனங்களினூடாகச் செயற்படுத்தப்படுகின்றன. அவ்வப்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் அல்லது இதற்கென உருவாக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களால் இவை செயற்படுத்தப்படுகின்றன. இவ்வுற்பத்திச் சங்கங்களுக்கும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குமிடையே நேரடி இணைப்புக்கள் இருக்கின்றன.

மாவட்ட அபிவிருத்திச்சபைத் திட்டங்களிற் பெரும்பாலானவை விவசாயத்தை அல்லது சிறு கைத்தொழிலைத் தழுவியுள்ளன. சில, கட்டுமானத்திட்டங்களாகவிருக்கின்றன. இப்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ள 1322 செய்திட்டங்களில், 586 விவசாயத்திட்டங்கள், 727 கைத்தொழில் திட்டங்களும் சிறு பொறியியற் திட்டங்களுமாகும். மாவட்ட அபிவிருத்திச் சபைத் திட்டங்களில் 99 வீதம் இவ்விரு வகைகளைச் சார்ந்தன. தேசீய அபிவிருத்திக்கு நேரடிப் பங்களிப்பைச் செலுத்துகின்றன. இப்பொழுது இச்சங்கங்களின் மொத்த உறுப்பினர் தொகை 24,886.

(வளரும்)

# வளர்ச்சியடைந்துவரும் நாடுகளுக்கு ஏற்ற தொழில் நுட்பம்

—எச். என். சேத்ரு

பெருவாரி பண்ட உற்பத்தி முறை, மிகப் பெரிய தொழில் நுட்பம் ஆகியவற்றைத்தான் வளர்ச்சியடைந்த நாடுகள் கடைப்பிடித்து வருகின்றன. இவற்றைத்தான் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளும் கடைப்பிடிக்க வேண்டும்என அவை விரும்புகின்றன; அதற்காக தீவிர ஆர்வமும் காட்டுகின்றன. இவ்விரு நடவடிக்கைகளை மேற்கொள்ள மூலதனம் அதிகம் தேவை. பணக்கார நாடுகளால் இவற்றைக் கடைப்பிடிக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஏழை நாடுகளுக்கும் பணக்கார நாடுகளுக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வு அதிகமாகிறது. பொருளாதாரச் சுரண்டலுக்கு இவ்விரு நடவடிக்கை காரணமாகிறது சில சமயங்களில் அச்சுறுத்தல்களாகவும் இவை பயன்படுகின்றன.

நம்நாட்டைப்போன்ற உழைப்பாளர் முனைப்பான பொருளாதாரத்தைக் கடைப்பிடிக்கும் நாட்டில் ஒரு உழைப்பாளியின் 6 மாத ஊதியத்தைக் கொண்டு. யந்திர சாதனம் வாங்கினால்தான், அத்தொழிலாளியை வேலைக்கு அமர்த்த முடியும். ஆனால், அமெரிக்கா போன்ற மூலதனத்தை நம்பியிருக்கும் முன்னேற்றமடைந்த தொழில் நுட்பத்தைக் கையாளும் அளவுக்கு வளர்ச்சியடைந்த பொருளாதாரம் கொண்ட நாட்டில், 350மாதஊதியத்தைக் கொண்டுதான் ஒரு உழைப்பாளியை. வேலைக்கு அமர்த்துவதற்குத் தேவையான யந்திர சாதனம் விலைக்கு வாங்கப்படுகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட மேலை நாட்டுத் தொழில் நுட்பத்தைஅடிப்படையாகக் கொண்டு, நடைபெறும் அபிவி த்திப் பணிகள் ஆமை போல் மிக மெதுவாக நடைபெறக் காரணம் என்ன என்பதை இது விளக்கும். ஆகையால் மக்களின் தேவையைக் குறைத்து, மூலதனத்தை அதிக பட்ச அளவுக்கு உயர்த்தும் விதத்தில், மேலை நாட்டுத் தொழில் நுட்ப முறைகள் வகுக்கப்படுகின்றன என்று கூறுவதுசாலப்பொருந்தும்.

### பொதுமக்கள் பங்கு

மூலதன முனைப்பான நவீன தொழில் நுட்பத்தை மேலை நாடுகளிலிருந்து தொடர்ந்து இறக்குமதி செய்து, நாம் பயன்படுத்த வேண்டுமா? இதற்கு விடை, வேண்டாம் என்றுதான் இருக்கும். இத்தகைய தொழில் நுட்ப முறைகளுக்கு நமது சமூக பொருளாதார அமைப்பில் எந்த இடமும் கிடைக்காது. அது மட்டுமல்லாமல் இதனால் நமது சமுதாயமும் சரிந்து போய்விடக் கூடிய நிலை உருவாகலாம். தொழில் நுட்ப முறைகளை வளர்ச்சியடைந்துவரும் நாட்டில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் பணக்காரர்கள் வாழும் இடங்களில் பயன்படுத்தலாம். ஆனால், சமூக பொருளாதார விழைவுகளுடன் இந்த நோக்கமும் கலந்து விடும்.

நமது சமூக பொருளாதார அமைப்புக்கு ஏற்ற, மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொள்ளக்கூடிய நிலையை உருவாக்கும், தொழில் நுட்ப முறைகளைக் கண்டுபிடித்து, கடைப்பிடிப்பது தான், இப்போதைய ஒரே வழி.

மீண்டும் மீண்டும் பெற முடியாதஓரளவுக்கே கிடைக்கக்கூடிய, இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதுதான் நவீன தொழில் நுட்பத்தைக் கடைப்பிடிப்பதில் உள்ள குறைபாடு. நிலத்தின் அடியில் உள்ள கனி வளங்கள் ஏற்படபலகோடி ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கும். ஆனால், தற்போது பயன்படுத்தும் வேகம், மக்கள் தொகை அதிகரிப்பு பிற்காலத்தில் கனிவளத்தைப் பயன்படுத்தும் வேகம் ஆகியவற்றைகருத்தில் கொண்டு பார்த்தால், சில பத்து ஆண்டு காலத்திற்குள்ளாகவே அவை தீர்ந்து போய்விடும் எனக் கூறலாம்.

பிரபல விஞ்ஞானிகள், தொழில் நுட்ப வல்லுநர்கள், பொருளாதார நிபுணர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட ரோம் சங்கம், இந்த விடயம் பற்றி விரிவாக ஆராய்ச்சி செய்து,பின்னர் வளர்ச்சியடைவதற்கும் ஒருவரம்பு உண்டு’ என்ற தலைப்பினைக் கொண்டபுத்தகத்தில் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய கஷ்டங்கள் பற்றி ஆருடம் கூறியுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட எண்ணெய் விலை உயர்வு, இயற்கை வளங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு, உற்பத்தித் தேக்கத்துடன் கூடியபணவீக்க நிலைமை, ஆகியவை அண்மைக் காலத்தில், மனித வரலாற்றில் எந்த அளவுக்கு நாம் இயற்கை வளங்களைச் சுரண்டக்கூடிய தொழில் நுட்பத்தை தொடர்ந்து இடைவிடாமல் பயன்படுத்தியிருக்கிறோம் என்பதைத் தெரிவிக்கின்றன.

இயற்கை வளங்கள் குறைய ஆரம்பித்தவுடன் தரம் குறைந்த வளங்களைச் சுரண்டிப் பயன் படுத்துகிறோம். இந்த நடவடிக்கையும்,ஒரு கட்டம்வரை மேற்கொள்ளப்படுகிறது. அதற்குப்பின், இயற்கை வளங்களை சுரண்டி எடுப்பதற்கும் செலவு, அவற்றின் மதிப்பை விட அதிகமாகிவிட்டால் நாம் நிறுத்திவிடுகின்றோம். இந்த நிலையை நில வாயு, பெட்ரோல் விஷயத்தில் நாம் அடுத்தசில பத்து ஆண்டு காலத்திற்குள் அடைந்து விடுவோம்.

மிகப் பின்தங்கிய விவசாயத் தொழில் நடத்தி வரும்பகுதிகளில் 1 கலோரி செலவழித்து பண்ணையில் வேலைசெய்தால் 15கலோரி உணவுப் பொருள்கள் கிடைக்கின்றன: ஆனால், வளர்ச்சியடைந்த நாடுகளில் நிலைமை முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. பண்ணை வேலை, உணவுப் பொருள்களைப் பக்குவப்படுத்துவது, சிப்பம் கட்டுவது, விநியோகிப்பது போன்ற அலுவல்களுக்கு அதிக கலோரி சக்தி செலவழிகிறது. ஆகையால் இவ்விரு 'துருவங்களுக்கும்' இடைப்பட்ட ஒரு தொழில் நுட்பம் தான் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கு விவசாய உற்பத்தி விஷயத்தில் தேவைப்படுகிறது.

**உள்நாட்டு வளங்கள் :**

இறக்குமதி அவசியம் என்பதை சுட்டிக் காட்ட நாம் பெரும் அளவு நடவடிக்கைமேற்கொள்ளவேண்டும் என்ற விடயத்தை அதிகமாக வலியுறுத்துகிறோம். சில சமயங்களில் மிக அதிக அளவுக்கு மூலதன முனைப்பான தொழில்நுட்ப முறைகளுக்கு அதிக முக்கியத்துவம் காட்டுகிறோம். இத்தகைய தொழில்நுட்ப முறைகள். நடைமுறைக்கு சரியல்லாதவையாக உள்ளன, அல்லது உள்ளூர் சூழ்நிலைக்கேற்ப, குறிப்பாக தொழில் உள்ளமைப்பு, போக்குவரத்துமுறை, மின் சக்தி விநியோகம், தகவல் தொடர்புஅமைப்புஆகியவற்றை போதுமான அளவுக்கு ஏற்படுத்தவேண்டிய சூழ்நிலைக்கேற்ப அமையாதவையாக உள்ளன.

உள்ளூர் வளங்களையும் உள் நாட்டுத் தொழில் திறமையையும், அடிப்படையாகக் கொண்டு, நாடு முழுவதிலும், சிறிய மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் ஏற்பட வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. இத்தகைய தொழிற்சாலைகளில் பல அந்தந்த மாவட்டத்தின் தேவையையோ அல்லது அந்தந்த வட்டத்தின் தேவையையோ பூர்த்தி செய்யக் கூடியனவாக விளங்கும்.

தேவைப்பட்டால், உள்ளூர் சூழ்நிலைக்கு ஏற்ப தகுந்த தொழில் நுட்ப முறைகளை வகுத்து, தன்னிறைவுக்கான பாதையை ஏற்படுத்தலாம். வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் இந்த வடயத்தில் தகுந்த தாபன ரீதியிலான அமைப்பை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய தொழில் அபிவிருத்தி அமைச்சகத்தில், ஏற்ற தொழில் நுட்பபிரிவு ஒன்றே இயங்கி வருகிறது. மேலும் உத்தரப் பிரதேசத்தில், வாரணாசியிலுள்ள காந்தீயக் கொள்கைக்கான கழகத்தில் மற்றொருபிரிவும் உள்ளது. ஆனால் பணி எதுவும் முழு அளவில் துவங்கவில்லை.

**ஏற்ற தொழில் நுட்பம்**

கிராமப்புறம் மற்றும் நகர்ப்புற சூழ்நிலைக்கு ஏற்ற தொழில்நுட்ப முறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. மூங்கிலினால்வலுவாக்கப்பட்ட கட்டடப்பொருள்களை உருவாக்குவது உள்ளூர் வளங்களைக் கொண்டு குறைந்த செலவில் வீடு கட்டுவதற்காக மாதிரிகளை வடிவமைப்பது ஆகியவற்றை ரூர்கியிலுள்ள மத்திய கட்டட ஆராய்ச்சிக் கழகமும், மற்ற இது போன்ற தாபனங்களும் ஊக்குவிக்கின்றன.

பாபா அணு ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள், மூங்கில் செடிகளை கதிரியத்திற்கு உட்படுத்தி, நல்ல உறுதியான கட்டடம் கட்டுவதற்கு பயன்படக் கூடிய மூங்கில் இனங்களை உருவாக்கியுள்ளனர். பண்ட உபயோகிப்பு திட்டங்கள் விஷயத்தில் பொருத்தமான மற்ற சில தொழில் நுட்ப முறைகள் எனக்கு நினைவுக்கு வருகின்றன.

இந்த எல்லாத் துறைகளிலும், ஆராய்ச்சி நடவடிக்கைகள் தேவையான அளவுக்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மற்ற தொழில் நுட்ப தாபனங்களும், நம்முடைய மனப்போக்கு, திறமை ஆகியவற்றை வளர்ச்சியடையச்செய்வதில், சிறந்த பங்கு ஆற்றவேண்டியிருக்கிறது. தொழில் முனைவோர்களின் திறமையைவளர்த்து கல்விமுறை வேகத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டியது இப்போது அவசியமாகும்.

இப்போதைய சூழ்நிலையில் நம்நாட்டிற்கு வேலை வாய்ப்பு அளிப்பவர்கள் தான் தேவை; வேலை தேடுவோர் தேவையில்லை; தொழில் துறையில் ஈடுபட்டிருப்பவர்களில், தொழில் முனைவோர்களின் சவால்களும் திருப்தியும்தான் மிக அதிகமாகும்.

**சமுதாய நிலையங்கள்**

சில தொழில்நுட்ப பல்கலைக்கழகங்கள், தொழில் முனைவதன் கருத்தை எடுத்துக் கூறவும் எதை நாம் கற்றுக்கொள்ள வேண்டுமோ அதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவும், தாங்களாகவே தொழில்பேட்டைகளை அமைத்துக் கொள்ள திட்டமிட்டு வருகின்றன. பல்கலைக் கழகத்தின் வளங்களையும் திறமைகளையும் பயன்படுத்தி, மாஸ்ஸெசூஸெட்ஸ் தொழில் நுட்பக் கழகம் போஸ்டனில் 128 சாலை மார்க்கத்தில் ஏற்படுத்தியுள்ள தொழிநுட்பபூங்கா ஒரு சிறந்த உதாரணம் ஆகும்.

பல்கலைக் கழகத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையே உள்ள தொடர்பு, சமுதாய அறிவியல் நிலையங்களாக உருவாகலாம். இத்தகைய நிலையங்கள், பொது மக்களுக்கு விஞ்ஞான விஷயங்களையும், கலாசாரப் பண்புகளையும் எடுத்துக் கூறலாம். பாடத்திட்டம், பயிற்சி ஆகியவை தற்போதையமற்றும் எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ற வண்ணம் அமைந்திருக்க வேண்டும்.

இந்தக் குறிக்கோளை அடைவதற்கு தொடர்ந்து தீவிரமானமுயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பௌதிக இயலுக்கும், உயிரியலுக்குமிடையே உள்ள இடைவெளி குறுகி வருவதை உணர்ந்து, சில தொழில் நுட்ப கழகங்கள் இவ்விரு துறைகளுக்கும் பொதுவான வகுப்புக்களை நடத்த முயன்று வருகின்றன.



அதேபோன்று, தொழில் நுட்பத்தால் சமுதாயத்தில் ஏற்பட்ட விளைவுகளும் சமுதாயத்தால் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட மாற்றமும் ஏற்ற தொழில் நுட்பத்தைஉருவாக்கும் நடவடிக்கைக்கு உதவும். நமது இளம் தொழில் நுட்ப நிபுணர்கள் தகுந்த பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டால், சமுதாயத்தில் அவர்கள் ஆற்ற வேண்டிய மிக விநோதமான பங்கு பற்றி அவர்களால் புரிந்து கொள்ள முடியும்.

மிகப் பெரிய தொழில் நுட்பத்தைத் தவறாகப் பயன்படுத்த வாய்ப்பு உள்ளது. இத்தகைய தொழில் நுட்பம் மூலம் நன்மை ஏற்படும் என நம்பலாம்,

ஆனால், தொழில்துறைக்கு எந்தப் பலனும் ஏற்படாது; நாம் எந்தத்தொழில் நுட்பத்தையும் தெரிந்தெடுக்கும் முன், சமூகச் செலவு ஆகியவற்றைப் சிந்தித்துப் பார்க்க வேண்டும்,

நவீன தொழில் நுட்பத்தின் அடித்தளத்தை விரிவாக ஆராய்வது, அரிய வளங்களை சிறந்த முறையில் சிக்கனமாகப் பயன் படுத்துவது பற்றி சிந்திப்பது, எதிர்காலத்திய வாழ்க்கை முறை பற்றி எண்ணிப் பார்ப்பது, நம்முடைய முயற்சிகள் மூலம், சமுதாய உரிமையை அடைய வேண்டும் என்ற கொள்கையை நினைத்துப் பார்ப்பது போன்றவற்றில் நாம் ஈடுபடவேண்டும்.

நன்றி — கூட்டுறவு

## கூட்டுறவு இயக்கத்தின் தலைசிறந்த பங்கு

சோசலிச சமுதாயத்தை உருவாக்கும் நமது திட்டத்தில் கூட்டுறவு இயக்கம் தலைசிறந்த பங்கு வகிக்கின்றது. நம்நாட்டில் உள்ள சாமானிய மக்களின் நல்வாழ்வுக்காகப் பணிபுரிவதில் இந்த இயக்கத்தில் உள்ள அனைவரும் சிறந்த நிருவாகத்திலும் தன்னலமற்ற சேவையிலும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக விளங்குவார்கள் என நம்புகின்றேன்.

தத்துவ மேதை
டாக்டர் ராதாகிருஷ்ணன்

(முற்றொடர்)

அயல் நாடுகளில் கூட்டுறவு !

# இந்திய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

—ம. அ. பிரகாசராசா

**நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கீட்டு வங்கிக் - கடன்கள்**

1956 ல் இந்திய அரசு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை முதலை வழங்காமல் கூட்டுறவு நிதி உதவி வங்கிகள் மூலம் வழங்குவது விரும்பத்தக்கதெனக் கருதியது. அபிவிருத்தி அடைந்த மாநிலங்களில் ஏற்கெனவே அரசின் கடன்களுடன் கூட்டாக வங்கிகளும் கடன் வழங்கும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டதுடன், அரசு இந்திய ஒதுக்கீடு வங்கியை இவ் விடயத்தில் கூட்டுறவு நிதி உதவி வங்கிகளுக்கு உதவி வழங்கும்படி கேட்டுள்ளது ஒதுக்கீட்டு வங்கி இவ்வேண்டுகோளை ஏற்று அதிகமான மாநில கூட்டுறவு வங்கிகளுக்கு ஒவ்வொரு வருடமும் கடன் எல்லையை நிர்ணயித்து ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களினதும் உயர்மட்ட நெசவாளர் சங்கங்களினதும் சந்தைப் படுத்தும் தேவைகளுக்கு மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் கடனுதவிகள் வழங்குகிறது.

**வீட்டுக் குடியேற்றத்திட்டங்கள்**

1962–63 ல் நெசவாளர் வீட்டுக் குடியேற்றத்திற்காக 4·5 கோடி ரூபா அரசு உதவியுள்ளது. இந்தியாவில் பெரிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கமாகிய ஈமிக்கநூர் (Yemiganur) நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 1953 ல் முதல் வீட்டுத் திட்டத்தை உருவாக்கியது. இக் குடியேற்றத் திட்ட பரந்த காணியில் நல்வீதி, வடிகால் மின் வசதிகளுடன் நூறு நெசவாளர் குடும்பங்களுக்கு 100 வீடுகள் நிருமாணிக்கப்பட்டுள்ளன. இந்த குடியேற்றத் திட்டமையத்தில் சங்கத்தின் காரியாலயம், கூட்ட மண்டபம், சாயமூட்டும் கூடம் களஞ்சிய அறைகள் முதலியன நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்படி பெருந்தொகையான பணத்தைச் சங்கத்தின் சிக்கன நிதியில் இட்டுள்ள உறுப்பினர்கள் அவர்களுக்கென கொடுக்கப்பட்ட வீடுகளின் பெறுமதியை 20 வருடங்களில் மரதாந்த சம்பள அளவு தடவைப் பணமாகச் செலுத்தி வீடுகளைச் சொந்தமாக்கிக் கொள்ளலாம். இக்குடியேற்றத்திட்டத்திற்குச் செலவாகிய முழுப்பணத்தையும் சங்கம் தனது சொந்த நிதியிலிருந்தும் கடனாகப் பெற்றும் பூர்த்தியாக்கியுள்ளது. இக்குடியேற்றத் திட்ட வாசிகளின் அக, புற சமூதாய வாழ்க்கை முன்னேற்றத்தைக் கண்ட ஏனைய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் தங்களுக்குச் சொந்தமான வீட்டு குடியேற்றத்திட்டங்களை அமைத்துள்ளன.

**மின்தறியும் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களும்:.**

1952 ல் சென்னை மாநிலத்தில் சொமனூரிலுள்ள (Somanur) நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் இரு உறுப்பினர்களுக்கு அவர்களின் வீடுகளில் சொந்தத்தில் மின்தறிகளை நிறுவக் கடன் வழங்கியுள்ளது. கைதறியைவிட மின்தறியால் பெற்றவருமானம் மூன்று மடங்கு அதிகமாக விருந்தது. இதை உணர்ந்த. பல அங்கத்தவர்கள் மின்தறிகளை அமைக்க முன்வந்தனர். ஆனால் மாநில கைத்தறி நெசவாளர்களும், தலைவர்களும் கைத்தறிகளின் இடத்தை மின்தறிகள் பிடிக்குமாயின் அதிகமான கைத்தறி நெசவாளர் வேலை இழக்க நேரிடும் என்ற அச்சத்தைத்தெரிவித்தனர். 1954 ல் நியமிக்கப்பட்ட புடைவை விசாரணைச் சபையின் கருத்துக்கள் பின்வருமாறு:— மிக கவனமான ஆராய்வின் பின், மின்சக்தி கிடைக்கக்கூடிய கைத்தறித் தொழில்கள் பரவலாயுள்ள பகுதிகளில் கைத்தறித்தொழிலை தொழில் நுட்ப ரீதியாக திறம்பட இயங்கச் செய்ய வேண்டும். இதற்கு கைத்தறியை ஒரளவு

தானே இயங்கும் விசைத் தறியாகவோ அல்லது மின் தறியாகவோ ஒரு குறிப்பிட்ட கால எல்லைக் கிரமத்தில் மாற்ற வேண்டும். இம்மாற்றத்தினால் பொருளாதார அமைப்பிலோ அல்லது சமுதாயக் கட்டுக் கோப்பிலோ கடுமையான குழப்பங்கள் ஏற்படமாட்டாது. எனவே இம்மாற்றம் தடுக்க முடியாத தொன்றெனவும் கருதுகின்றது. இக்கருத்தைக் கவனத்திலே கொண்டு இந்திய அரசு சில நிபந்தனைகளின் பேரில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களில் 35,000 மின்தறிகளை அமைக்கத் தீர்மானித்தது. ஆனால் அத்திட்டம் கால முடிவில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் 12,000 மின்தறிகளை அமைத்ததினால் அரசு இத்திட்டத்தை கைவிட்டது. 30,000 ஜனத்தொகையைக் கொண்ட கிராமத்துக்கு ஒரு மின்தறி என்ற கட்டுப்பாட்டினாலும், நடைமுறை முதலுக்கு போதிய உதவி கிடைக்காமையினாலே மின்தறிகள் எதிர்பார்த்த அளவிற்கு அமைக்க முடியாமற் போனதற்குரிய முக்கிய காரணமென மின்தறி விசாரணைச் சபை (1964) விளக்கம் கொடுத்தது. மின்தறிகள் அமைக்கக் கூடிய தேவையான சகல வசதிகளும் கொண்ட பிரதான பட்டினத்தின் அண்மையில் அமைந்துள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் பயனடையக் கூடிய விதமாக இத்திட்டம் மறுசீரமைக்கப் பட வேண்டும்'' என விதந்துரைத்தது. அரசும் கூட்டுறவு நிதி உதவி வங்கிகளும் வழங்கிய பெருந்தொகையான நிதி உதவியுடன் விசாரணைச் சபையின் விதந்துரைகள் அமுல் செய்யப்பட்ட பொழுது நகரங்களிலும் நகரங்களாக வளர்ந்து வரும் பகுதிகளிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மின்தறி கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றி அமைக்கப்பட்டன. இதனால் நெசவாளர்களின் மாதாந்த வருமானம் அதிகரித்து வாழ்க்கைத் தரமும் திருந்தியது.

(முற்றும்)

# யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா தேசீய கூட்டுறவுச் சபை நடாத்திய கூட்டுறவுத் தினவிழா இறுதிப் போட்டி முடிவுகள்

## பேச்சுப் போட்டி

### கனிஷ்ட பிரிவு — பெண்கள்

1—ம் இடம்: ம. அன்ரனிற்ரு, புனித திரேசா மடம்
வலி. கிழக்கு வட பகுதி ப. நோ. கூ. ச.
2—ம் இடம்: பொ. தனலட்சுமி, சரசாலை வித்தியாசாலை
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்
3—ம் இடம்: வி. சுமதி, செங்குந்தா இந்துக் கல்லூரி
நல்லூர் ப. நோ. கூ, சங்கம்

### கனிஷ்ட பிரிவு — ஆண்கள்

1—ம் இடம்: பொ. மாவலிராஜன், ஸ்கந்தவரோதையக் கல்லூரி
அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்
2—ம் இடம்: செ. பகீரதன் டிறிபேக் கல்லூரி
சாவகச்சேரி ப. நோ. கூ, சங்கம்
3—ம் இடம்: க. சிவபாலன், செங்குந்தா இந்துக் கல்லூரி
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

### சிரேஷ்ட பிரிவு - பெண்கள்

1—ம் இடம்; சி. திருக்கேதீஸ்வரி, கொக்குவில் இந்துக் கல்லூரி
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
2—ம் இடம்: இ. சித்திராதேவி, நாவற்குளி மாகவித்தியாலம
தென்மராட்சி மேற்கு ப, நோ. கூ. ச.
3—ம் இடம்: சி. விமலா, சரஸ்வதி வித்தியாசாலை
வலி-கிழக்கு வடபகுதி ப, நோ: கூ. சங்கம்

### சிரேஷ்ட பிரிவு . ஆண்கள்

1—ம் இடம்: ஆ, குகானந்தன், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
அளவெட்டி மல்லாகம், ப. நே. கூ. சங்கம்
2—ம் இடம்: பொ. பாலகுமார் மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பளை ப, நோ. கூ. சங்கம்
3—ம் இடம்: எம். சிவராசா, டிறிக்பேக் கல்லூரி
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்

## கீதப் போட்டி

### கனிஷ்ட பிரிவு - பெண்கள்

1—ம் இடம்: ஜெ. சாந்தி, மெதடிஸ்த பெண்கள் பாடசாலை
பருத்தித்துறை ப. நோ· கூ. சங்கம்
2—ம் இடம்: த. திலகவதி, மட்டுவில் கமலாசனி வித்தியாசாலை
சாவகச்சேரி ப. நே. கூ. சங்கம்
3—ம் இடம்: அ. கிறிஸ்ரா, புனித திரேசா பாடசாலை
வலி. கிழக்கு, வடபகுதி ப. நே. கூ. சங்கம்

**கனிஷ்ட பிரிவு - ஆண்கள்**

1—ம்இடம்: எஸ். குலசிங்கம், டிறிபேக் கல்லூரி
சாவகச்சேரி ப, நோ. கூ. சங்கம்

2—ம் இடம்; க. சிவகுமார் செங்குந்தா இந்துக் கல்லூரி
நல்லூர் ப. நோ. கூ, சங்கம்

3—ம் இடம்: தி. இரவிதாசன் புலோலி ஆண்கள் பாடசாலை
பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்

**சிரேஷ்ட பிரிவு - பெண்கள்**

1—ம் இடம்; ச. பகவதி —
அளவெட்டி மல்லாகம் ப, நோ. கூ. ச.

2—ம் இடம்: சி. சிவகாமசுந்தரி நாவற்குளி, மகாவித்தியாலயம்
தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. கங்கம்

3—ம் இடம்: எஸ். சூரியகலா, செங்குந்தா இந்துக் கல்லூரி
நல்லூர் ப. நோ. கூ. ச.

**சிரேஷ்ட பிரிவு - ஆண்கள்**

1-ம் இடம்: சு. அருணகிநாதன் தெல்லிப்பளை ப. நோ. கூ. ச.

**கூட்டுப் பாடல் - பெண்கள்**

1-ம் இடம்: டிறிபேர்க் கல்லூரி சாவகச்சேரி ப. நோ. கூ. ச.

2-ம் இடம்; ஞானபண்டித வித்தியாசாலை நல்லூர் ப. நோ. கூ. ச.

3-ம் இடம்: மெதடிஸ்த பெண்கள் பாடசாலை பருத்தித்துறை
ப. நோ. கூ. ச.

**கூட்டுப் பாடல் - ஆண்கள்**

1-ம் இடம்; புலோலி ஆண்கள் பாடசாலை பருத்தித்துறை
ப. நோ. கூ. ச.

2-ம் இடம்: மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலை தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. ச.

**நாடகம்**

1-ம் இடம்: ''பாதை தெரிகிறது'' தெல்லிப்பளை ப, நோ. கூ. ச.

2-ம் இடம்: ''கூட்டுறவே எங்கள் இரத்தம்''
பண்டத்தரிப்பு பரிஷ ப. நோ. கூ. ச.

3-ம் இடம்: ''தோப்பு'' மானிப்பாய், ப. நோ. கூ. ச

(முற்றொடர்)

# பெரிய ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களின் மாதிரி நடைமுறைப் பிரமாணங்கள்

உ. சேவையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள பணியாளர்களுக்கு அக்கால எல்லையில், அவர்களது சம்பளத்தில் 50 வீதத்திற்கு மேலாக வழங்கப்படலாகாது. குற்றவியல் சட்டத்தின்படி குற்றச் செயலான கையிருப்பு அல்லது காசைக் கையாடியவர் என்ற சந்தேகத்தின் பேரில் வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள ஒரு பணியாளருக்கு அவரது சம்பளத்தில் எப்பகுதியையேனும் வழங்காது விடலாம். அப்பணியாளரைத் தொடர்ந்து சேவையில் வைத்திருத்தல் விசாரணைகள் செம்மையாக நடாத்தப்படுவதற்குத் தடையாகவிருக்கும் என்று கருதப்பட்டால் மட்டுமே அவர் வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தப்படல் வேண்டும். விசாரணைக்குப் பின்பு அவரை வேலையிலிருந்து நீக்குவதென்றோ அல்லது வேறு எதேனும் குறைந்த தண்டனையை விதிப்பதென்றோ தீர்மானிக்கப்படாவிடின் சேவையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தப்படாத பணியாளராக அவர் கருதப்பட வேண்டியதோடு, விசாரணை முடிவுகள் குறித்து நெறியாளர் குழு எடுக்கும் தீர்மானத்திற்கு அமைவாக அவரது சம்பளங்கள் அவருக்கு வழங்கப்படலாம்.

**14. சம்பள முற்பணம் :**

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு விதிகள் 32,33,34 க்கு ஏற்ப நிரந்தர பணியாளர்களுக்கு சம்பள முற்பணங்கள் வழங்கப்படலாம்.

**15. பணியாளர்களின் பிணைப் பணம் :**

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு விதிகள் 40,41,42 க்கு அமைவாகப் பணியாளர்களிடமிருந்து பிணைப்பணங்கள் பெறப்படல் வேண்டும். காசாகப் பெறப்படும் பிணைப் பணம் கூட்டுறவு வேலையா

ளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் சங்கத்தின் வியாபாரக் கணக்கு அல்லாத கணக்கில் இடப்படல் வேண்டும். பணியாளர்களின் விருப்பப்படி, இவ்வாறு சேரும் வட்டி கணக்கில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது ஆண்டுதோறும் அவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

**16. மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவுகள் மேலதிகநேர வேலை கொடுப்பனவுகளுக்கு உரித்துள்ள பணியாளர்கள் :**

நிறைவேற்றுத் துறை, வெளிக்கள உத்தியோகத்தர்களைத்தவிர, எல்லாப் பணியாளர்களும் சேவையின் அவசரத் தேவைகளுக்கு ஏற்ப மேலதிக நேர வேலை செய்தல் வேண்டும்.

(அ) பொதுமுகாமையாளரின் எழுத்து மூலமான அங்கீகாரமின்றி எப்பணியாளரும் ஏதேனும் மேலதிக நேர வேலை செய்வதற்கு உரித்துடையவரல்லர்.

(ஆ) மேலதிக வேலை நேரத்திற்கான எல்லா விண்ணப்பங்களும் அவ்வத்துறை தலைவரினால் பின்வரும் விபரங்கள் அடங்கிய அறிக்கையினால் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்.

1. மேலதிக நேர வேலை செய்வதற்கானதேவை
2. அது நிகழ்வதற்கான காரணங்கள்
3. மேலதிகமாக ஏற்படக்கூடிய செலவுகளின் மதிப்பீடு.

(இ) ஒரு மாதத்தில் 40 மணித்தியாலங்களுக்கு மேலாக பணியாளர்கள் எவரேனும் மேலதிக நேர வேலை செய்தலாகாது.

(ஈ) செய்யப்பட்ட வேலை குறித்து அத்துறைத் தலைவரின் அறிக்கையின் பேரில் மட்டுமே எல்லா மேலதிக நேர வேலை கொடுப்பனவுகள் வழங்கப்படல் வேண்டும்.

(உ) அடுத்து வரும் மாதத்தில் 15 ம் திகதிக்கு முன்னர் எல்லா மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகளும் வழங்கப்படல் வேண்டும்.

**17. பணியாளர்களின் பதவி உயர்வு :**

அங்கீகரிக்கப்பட்ட வேலையாள் கோப்பிலுள்ள வெற்றிடங்களை நிரப்பும் போது சங்கத்தில் ஏற்கனவே வேலையாற்றும் பணியாளர்களுக்கு, கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் இசைவுடன், முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

**18. ஆள்பணி முகாமை :**

அ. நிறைவேற்றுத் துறை உத்தியோகத்தரையும் துறைத்தலைவர்களையும் நிருவகிக்கும் பொறுப்பு பொது முகாமையாளரைச் சார்ந்தது. எல்லாப் பணியாளர்களும் முறையே தத்தமது துறையின் நேரடித் தலைவரின் நெறிப்பாடுக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக நடத்தல் வேண்டும்.

ஆ. இப் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கும், நெறியாளர் குழுவிற்கு வழங்கப்பட்டிருக்கும் பிரத்தியேக அதிகாரத்திற்கும் அமைவாக, பணியாளர்களை ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்த பொதுமுகாமையாளருக்கு அதிகாரமுண்டு.

இ. பொதுமுகாமையாளரினது வேலையை மேற்பார்வை செய்வதற்கும், அவரை ஒழுக்கக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தவும் தலைவருக்கும், நெறியாளர் குழுவிற்கும் அதிகாரமுண்டு. பொதுமுகாமையாளருக்குத் தலைவர் பிறப்பிக்கும் ஏதேனும் கட்டளை எழுத்தில் இருத்தல் வேண்டும்.

**.9. பணியாளரின் இடமாற்றம்**

அ. சேவையின் அவசரத் தேவைகளுக்கு ஏற்பவும் துறைத் தலைவர்களின் தகவுரைகளின் ஆதாரத்தோடு பணியாளர்கள் விடுக்கும் கோரிக்கைக்கு இசையவும் எப்பணியாளரும் இடமாற்றம் செய்யப்படலாம்.

ஆ. தொடர்ந்து ஒரு ஆண்டிற்கு மேலாக கிளை நிலையப் பணியாளர் ஒருவரோ கணக்குப் பதிவு எழுதுவினைஞரோ அல்லது பொது எழுதுவினைஞரோ (எது பொருத்தமோ) ஒரேவேலை இடத்தில் இருத்தலாகாது. அவர்/அவர்கள் வகித்த பதவி/பதவிகளுக்கு ஒத்த பதவி/பதவிகளுக்கே இடமாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

இ. வருடாந்த இடமாற்றங்களுக்கான எல்லாத் தகவுரைகளும் ஆண்டு தொடங்குவதற்கு குறைந்தது ஒரு மாதத்திற்காவது முன்னர் நெறியாளர் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். சேவையின் அவசரத் தேவைகளைச் சமாளிக்கும் பொருட்டும், சங்கத்தின் வியாபாரம் சமுகமாக நடைபெறும் பொருட்டும், பொதுமுகாமையாளர்

திடீர் இடமாற்றங்களுக்கு உத்தரவிடலாம்.

**20. பதில் நியமனங்கள் :**

அவ்வத்துறையில் அடுத்துள்ள, சேவையில் சிரேஷ்ட பணியாளர்களுக்கேமுதலில் பதில் நியமனங்கள் வழங்கப்படல் வேண்டும்.

(வளரும்)

-o-

## பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்

**பேச்சுப் போட்டி சிரேஷ்ட பிரிவு**

S. செந்துராசா

**கனிஷ்ட பிரிவு**

தே. மோசீகீரன்

**தனிப்பாடல்**

தி. ரவிதாசன்
சாந்தி ஜெயராஜசிங்கம்

**கூட்டுப்பாடல்**

சாந்தி ஜெயராஜசிங்கம்
சுமதி ராமகிருஷ்ணன்
ஜெயலட்சுமி தம்பிராசா
மிதிலாதேவி தர்மராஜா
ஜெயகுமாரி பரமகுரு
சுபத்திரா முத்தையா
பத்மநாதன் சிதம்பரநாதன்
(மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலை)
தி. இரவிதாசன்
மா. வசந்தன்
மு. கடம்பநாதன்
இ. பிரேமதசரதன்
கா. நடேசமூர்த்தி
வே. குமுக்கேசன்

**நாடகம்**

பருத்தித்துறை ப. நோ. கூ. ச.

# வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்

# வீரசிங்கம் மண்டபம்

## அரங்க அமைப்பு ஆசன அமைப்பு

## மின்னொளி அமைப்பு

### அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

### வாடகைக் கட்டணங்கள்

**நாடகம், நடனம்**

| | | |
|---|---|---|
| | இரவு 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | 250-00 |
| | பகல் .. .. | 200-00 |
| **இசை நிகழ்ச்சிகள்** | | |
| | இரவு .. .. | 175-00 |
| | பகல் .. .. | 150-00 |
| **சினிமா நிகழ்ச்சிகள்** | | |
| | இரவு முதலாவது மணித்தியாலம் | 100-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 40-00 |
| | பகல் முதலாவது மணித்தியாலம் | 75-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதிநேரம்) 1 மணித்தியாலம் | 30-00 |
| **திருமணம் – பகல் அல்லது இரவு** | | |
| | முதல் 3 மணித்தியாலங்கள் | 250-00 |
| | (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | 50-00 |
| **[illegible]** | இரவு | 150-00 |
| | பகல் | 100-00 |

**குறிப்பு:** கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்படவேண்டும்.

தேசிய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக்குழு)
12, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:
7286

Published by the Jaffna District Committee, National Co-operative Council of Sri Lanka Ltd., (formerly known as the Northern Div. Co-operative Federation, Ltd.), 12, K.K.S. Road, Jaffna and printed at the Jaffna Municipality M.P.C.S. Printing Branch, the Co-op. Printers Ltd., Jaffna, (formerly Northern Province Co-operative Printing and Publishing Society Ltd.